
வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
பொருள்
வணக்கம்...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# தாயுமானவரின் பொருள் வணக்கம்

## அருள்நிதி
## மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே…


1. பெருவெளியைச் சிந்தை செய்வாம்
2. அமுது ஊற்றா? இன்ப ஊற்றா?
3. உயிரில் கலந்த பொருள்
4. ஆனந்தமே மெய்ப்பொருள் (பிரம்மம்)
5. .மெய்ப்பொருளின் தன்மாற்றம்
6. மெய்ப்பொருளே குருவாக வந்தார்.
7. மனிதன் – ஆணவம் = மெய்ப்பொருள்
8. மெய்ப்பொருள் முழுமைப் பொருள்
9. பூதம் எல்லாம் தன் அகத்தில் வெளியாய்.
10. பேரன்பால் உள் உருகி மொழிகுழறி……
11. மெய்ப்பொருளை காட்டுபவர் குரு
12. உம்மறிவே விளக்கம் கூறும்.


## பொருள் வணக்கம்

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் எனும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவேளியே தெய்வம் அல்லது மெய்ப்பொருள் என்பது வேதாத்தியக் கடவுள் கோட்பாடாகும்.

பெருவெளியின் பெரும் செயல்களை தனது அகத்தவத்தில் உணர்ந்து உணர்த்தியவர் வேதாத்திரி மகரிஷி.

தாயுமானவர் ”பொருள்” (மெய்ப்பொருள்) என்ற தலைப்பில் 96 வரிகளில் பன்னிரண்டு பாடல்களை பாடியுள்ளார்.

வேதாத்திரியமோ, ஞானக்களஞ்சியத்தில், மெய்ப்பொருள் என்ற தலைப்பில் பதினெட்டு பாடல்களையும், அங்கங்கே பல பாடல்களில் மெய்ப்பொருள் பற்றியும் குறிப்பிடுகிறது.

# 1.பெருவெளியைச் சிந்தை செய்வாம்

இப்போது உலகம் சிந்திக்க ஆரம்பித்து விட்டது. சிந்தனை உள்ளவர்கள் இன்று அதிகம். சிந்தனை உள்ள இளைஞர்கள் வந்துவிட்டார்கள். இனி சாக்ரட்டீஸ் மாதிரி ஒருவரையும் மெய்ப்பொருள் விளக்கம் கொடுத்ததற்காக உலகம் மாய்க்க முடியாது.

மெய்ப்பொருள் எங்கும் உள்ளது. இது இல்லாத இடம் இல்லை. இது நம் பிரபஞ்சத்தை சூழ்ந்துள்ளது. பிரபஞ்சத்திற்கும் அப்பாலுக்கும் அப்பாலாய் முடிவில்லாத தூரம் வரை அது வியாபித்திருக்கிறது.

நித்தியமாய்: நிர்மலமாய்: நிட்களமாய்:
  நிராமயமாய்:நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த்: தூரமுமாய்ச்: சமீபமுமாய்த்:
  துரியநிறை சுடராய்: எல்லாம்
வைத்து இருந்த தாரகமாய்ச்: ஆனந்த
  மயம் ஆகி. மனம் வாக்கு எட்டாச்:
சித்து உருவாய் நின்றவொன்றைச். சுகாரம்பப்
  பெருவெளியைச் சிந்தை செய்வாம்." (தா.பா.14)

- நிலைத்ததாய்.
- மலமற்றதாய்.
- உருவம் இல்லாததாய்.
- குறைவில்லாததாய்.
- முழுமை உடையதாய்.
- எப்பொழுதும் தூய்மை உடையதாய்.
- நினையாதவர்க்குத் தொலைவில் உள்ளதாய்.
- நினைப்பவர்க்கு அருகில் உள்ளதாய்.
- துரியத்தில் விளங்கும் பேரொளியாய்.
- எல்லாப் பொருள்களையும் தன்னகத்தே தாங்கி நிற்கும் நிலைக்களமாய்.
- பேரின்ப வடிவாய்.
- மனம் வாக்கால் எட்ட முடியாத ஞான சொரூபமாய்.

நின்ற ஒரு பொருளை. இன்பத்தின் தொடக்கமாய் சிதாகாயத்தை நினைவில் நிறுத்வோமாக!

மெய்ப்பொருளை நினைவு கொள்ள வலியுறுத்துகிறார் தாயுமானவர். மெய்பொருளை உணர்ந்து சிந்தனையில் நினைவு கொள்ள வழி காட்டுகிறது வேதாத்திரியம்.

"மெய்ப்பொருளை சுத்தவெளியாய் உணர்ந்து கொண்டால்
  மேலான அதன்தன்மை முற்றறிவு ஆகும்.
மெய்ப்பொருளின் நுண்பிளவு விரைவே விண்ணாம்
  மேவியஅவ் விண்ணினையே எல்லை கொண்டு
மெய்விரிந்த ஐம்பூதம் உணர்ச்சி உள்ள
  மிகச் சிறந்த உயிரினங்கள் அனைத்திலும் நான்.
மெய்யுணரும் மனிதன் வரை வேறுபாடு
  மேல்விரிந்து பூரணாம் அறிவின் போக்கே" (ஞாக.பா.1223)

எது நீடித்து, நிலைத்து. மாறாமல், என்றும் இருக்கிறதோ அதுவே மெய்ப்பொருள். உண்மைப்பொருள்.

அந்த மெய்ப்பொருளை சுத்தவெளியாக உணர்ந்து கொண்டால், அதனுடைய மேன்மையான தரம், தன்மை முற்றறிவு ஆகும்.

தன்னிலே தானே சுத்தவெளி ஏற்படுத்திக் கொண்ட நுண்ணிய விரைவு இயக்கம் விண் ஆகும்.

தன்நிலை மாற்றம் பெற்று, தன்னிலேயே தங்கி உள்ள அந்த விண்ணின் இயக்கத்தையே எல்லையாகக் கொண்டு சுத்தவெளியானது ஐந்து பௌதீகப் பிரவுகளாக மலர்ச்சி பெற்றது.

ஐந்து பௌதீகப் பிரிவுகளும் குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் ஒன்றிணைந்து ஒன்றை ஒன்று காக்கும் படியான அமைப்பில் காந்தச் சூழலும் கருமையம் அமைந்து சீவ இனங்களாக மலர்ந்தது.

உணர்ச்சியுள்ள அனைத்து சீவ இனங்களிலும், ம   கிச் சி றந்த உயிரினமே நான்.

மெய்ப்பொருளாகிய சுத்தவெளியை மனிதன் உணராத வரை, தன்னையும், மற்றவற்றையும் வேற வேறாகவே காண்கிறான்.

மனதை விரித்து அறிவை உணர்த்தி, பேரறிவாகிய சுத்தவெளியில் இணையும் போது முற்றறிவாக பூரணமாக உயர்வடைகிறது.

உண்மை, உணர்வு இல்லாத வரை வேறுபடுத்திக் காண்கின்ற அறிவின் போக்கானது, விரிவு நிலையில் பேரறிவில் லயமாகும் போது எல்லாமே ஒன்றாகி விடும்.

தனக்குள்ளாகவே எல்லாவற்றையும், எல்லாவற்றிலும் தன்னையும் உணர்கின்ற நிலையே முற்றறிவு நிலை ஆகும்.

இந்த முற்றறிவை உணர்ந்து புரிந்து தெளிந்து அந்நிலையில் ஆனந்தமாக வாழ்வோமாக!

## 2. அமுது ஊற்றா? இன்ப ஊற்றா?

உடலுக்குள் உயிர், உயிருக்குள் அறிவு. அறிவுக்குள் அருட் பேராற்றலின் இயற்கை மெய்ப்பொருள்.

மெய்ப்பொருள் என்ற  இறைவெளியானது ஒரு புனிதமான அப்பழுக்கற்ற ஒளி ஊடுருவும் சர்வ வல்லமையுள்ள வெள்ளம். அமுத ஊற்று.

யாதுமனம் நினையும் அந்த நினைவுக்கு
  நினைவு ஆகி யாதநின் பாலும்
பேதம் அற நின்று உயிருக்கு உயிர்ஆகி.
  அன்பருக்கு பேரா னந்தக்
கோது இல் அமுது ஊற்று அரும்பிக், குணம் குறி ஒன்று
  அறத்தன்னைக் கொடுத்துக் காட்டும்
தீது இல்பரா பரம் ஆன சித்தாந்தப்
  பேரொளியைச் சிந்தை செய்வாம்." (தா.பா.15)

- மனம் எதனை நினைக்குமோ,
- அந்த நினைவுக்கு நினைவாகவும்.
- எதனை விட்டும் பிரிந்து நில்லாமல், உயிருக்கு உயிராகவும்.
- மெய்யடியார்களுக்குப் பேரின்பமாகிய குற்றமில்லாத அமுத ஊற்றாய்ப் பீறிட்டும்.
- குணமும் அடையளமும் இன்றி அடியார்களது உள்ளத்தில் வெளிப்பட்டுத் தன்னைக் காட்டிக் கொள்வதும்.
- குற்றமற்றதும் மேலான பரமும் ஆன, நிச்சயித்து அறியப்பட்ட பெருஞ்சுடரைச்

சிந்தையில் நிறுத்துவோமாக! மெய்ப்பொருளை அமுத ஊற்று என்கிறார் தாயுமானவர்.  இன்ப ஊற்று என்கிறது வேதாத்திரியம்.

இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா –
எங்கும் இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா!

அன்பும் கருணையுமாய் அனைத்து உயிர்களூடும்
இன்ப ஊற்றாய் அறிவாய் இயங்கும் பராபரமே. (இன்ப ஊற்றாய்)

எழிலுலகம் படைத்து எல்லா உயிர்களுக்கும்
வழிவழியாக வாழ வாய்ப்பை நிரப்பி வைத்து
ஒழிவிலாத் தொடராக உள்ளும் புறமும் ஊற்றாய்
அழிவிலாப் பேரின்ப அறிவலையாய்த் திகழும், (இன்ப ஊற்றாய்)

உண்மை நிலை மறந்து உணர்வு தன்முனைப்பாகி,
எண்ணம் ‘தான்’ ‘தனது’ என்று இறுகிக் குறுகி நின்று
மண்ணைப் பொன்னை மென்மேலும் மாறிமாறி நினைந்து
கண்ணும் கருத்தும் தீய காமம் புகாமல் என்னுள் (இன்ப ஊற்றாய்)

உடலாய் எனை நினைந்தேன் உணர்ச்சிகள் வருந்தின
உடலுள் உயிராய் என்னை உயர்ந்து அறிவில் நிறைந்தேன்
உடலுயிர் ஊடறிவாய் உன்னை உணர்ந்தபோது
உடலுயிர் அறிவு நீயாய் உணர்ந்துன்னுள்நான் அடங்க... (இன்ப ஊற்றாய்)

வினைப்பதிவாம் சுமையை விடுத்துத் தூய்மை பெறவே
நினைவாய் உடலெடுத்தேன் நிலம் மீது விழுந்த பின்னே
எனை மறந்தேன் என்றன் வினை மறந்தேன் இறைவா!
எனை மறந்தேன் ஆனால் நீ உள் நிறைந்து எனை மீட்டு” (ஞா.க.பா.1646-2)

இன்ப ஊற்றாக எங்குமே நிறைந்த மெய்ப்பொருளாகிய இறைநிலை, அனைத்து சீவ இனங்களிலும் அன்பும் கருணையும் வெளிப்படுத்தும் அறிவாக இயங்குகிறது.

மெய்யடியார்களுக்குப் பேரின்பமாகி அமுத ஊற்றாய்ப் பீறட்டு கொண்டுள்ளது மெய்ப்பொருள் என்கிறார் தாயுமானவர்,

பேரின்பம் என்றால் என்ன? வேதாத்திரியம் அழகாக பேரின்ப ஊற்றான மெய்ப்பொருளை அடையாளம் காட்டுகிறது.

அதைவிடப் பெரிய இன்பம் இல்லை என்பதைக் குறிக்க பேரின்பம் என்கிறோம்.

ஊற்று என்பது குறைவில்லாமல் தொடர்ந்து வந்து கொண்டேயிருப்பது. இன்பமானது நீடித்தும் நிலைத்தும் இருப்பது ஆகும்.

மன அலைச் சுழலானது குறைந்து அறிவு என்ற நிலைக்குப் போகும்போது. தன்னையே எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் தனக்குள்ளேயும் காண்கின்ற அகத்துணர்வு ஏற்படும்.

பேரின்பம், பேரானந்த நிலையாகும். இன்ப ஊற்றாக எங்குமே நிறைந்த இறைநிலை, அனைத்து சீவ இனங்களிலும் அன்பும் கருணையும் வெளிப்படுத்தும் அறிவாக இயங்குகிறது.

பரம் என்றால் அதைவிடப் பெரிதும் நுண்ணியதும் இல்லை. இணையானதுமில்லை என்பதாகும். அதனையே பேரறிவு என்கிறோம்.

பிரபஞ்சமாகி எண்ணிலடங்காத கோள்களிலே, நில உலகமும், சீவ இனங்களுமாகி தொடர்ந்து வழிவழியாக வாழ்வதற்கு வாய்ப்புகளையும் நிரப்பி வைத்து, ஓய்வு இல்லாமல், அகமும் புறமுமாக, அழிவில்லாத பேரறிவாக எல்லாவற்றிலும் இருந்து இயக்கி. காத்து, முடித்தும் வைக்கிறது.

இந்த உண்மைகளை எல்லாம் மறந்த மயக்க நிலையில் தன்முனைப்பின் காரணமாக அழிந்து போகக்கூடிய உடலையே நான் என்று கருதியபோது உணர்ச்சிவயப்பட்ட நிலையில் துன்புற்றேன்.

உடலுக்குள் உயிர். உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே நானாகவும், நீயாகவும் இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

கர்ம வினைப் பதிவுகளைக் கழித்து ஆன்மாவைத் தூய்மை செய்து கொள்வதற்காகவே உடலெடுத்து நில உலகில் வாழ்ந்து கொண்டுள்ளேன்.

பிறவியின் நோக்கத்தையும் என் வினைகளையும், உன் பெருமையையும் மறந்துவிட்டேன். ஆனால் நீ என்னுள்ளே அறிவாக நிறைந்து வழி நடத்துவாயாக.

## 3.உயிரில் கலந்த பொருள்

மெய்ப்பொருளாகிய பிரம்மமே எல்லாமாக ஆகி, எல்லாவற்றிலும் இருப்பாக இருந்து இயக்கிக் காத்து முடித்தும் வைக்கிறது.

அதுவே நானாகவும் இருக்கிறது. நானில் உயிராகவும் இருக்கிறது. என்ற கருத்தை உணர்ந்த நல்லவர்கள் உலகுக்கு ஒளி காட்டும் உயர்வானவர்கள் ஆவர்.

பெருவெளியாய். ஐம்பூதம் பிறப்பு இடமாய்ப்.
பேசாத பெரிய மோனம்
வரும் இடமாய் மனம் ஆதிக்கு எட்டாத
பேரின்ப மயமாய். ஞானக்
குருஅருளால் காட்டிடவும் அன்பரைக்கோத்து
அறவிழுங்கிக் கொண்டு .அப் பாலும்
தெரிவு, அரிதாய்க் கலந்தது எந்தப் பொருள்? அந்தப்
பொருளினையாம் சிந்தை செய்வாம்.” (தா.பா.16)

- பெரிய வெட்ட வெளியாய்.
- நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களுக்குப் பிறப்பிடமாய்.
- பேச முடியாத பெரிய மௌனம் கைவரும் இடமாய்.
- மனம், வாக்கு, காயத்திற்கு எட்டாத பேரின்ப வடிவாய்
- ஞானாசிரியன் தன் திருவருளால் காட்டிட,
- அன்பரது உயிரில் ஐக்கியம் கூடி,
- தற்போதம் அறுமாறு செய்து,
- தன்னுடன் இணைத்துக் கொண்டதும்,
- அதற்கு மேலும் தெரிந்து கொள்ள அருமை உடையதாய்,
- உயிரில் கலந்த பொருள் எந்தப் பொருளோ,

அந்தப் பொருளினை யாம் சிந்தனையில் நிறுத்துவோமா” என்கிறார் தாயுமானவர்.

“மெய்ப்பொருளே நானாகவும் உள்ளது” அந்த நானில் உயிராகவும் உள்ளது” என்பது வேதாத்திரியம்.

மெய்ப்பொருள் அரூபமானது, எல்லையற்றது என்னும் வேதாந்த சத்தியங்களிலிருந்து நழுவி, கடவுளை மனிதனைப் போன்று சிறு உருவத்தில் சித்தரித்து கல்யாணம் செய்து, திருவிழாக்களை நடத்தி வழிபடுவது மனிதனின் கற்பனையின் உச்சக்கட்டம்.

திரும்ப திரும்ப சொல்லப்பட்டு வந்த இந்தக் கற்பனைக் கதைகளுக்கு அப்பாற்பட்டதே வேதாத்திரியம்.

அவனின் இயக்கம் அணுவாற்றல்,
அணுவின் கூட்டு பக்கும் நீ,“

என்ற வரிகள் வாயிலாகவும்,

பழுத்த நிலை வரும் வரையில் நீ, நான் என்போம்
பதமடைந்தோம் ஒன்றானோம் பரமானந்தம்”

என்ற வரிகள் வாயிலாகவும் அணு முதல் அனைத்தும் மெய்ப்பொருள் என்ற வெட்ட வெளியின் இயக்க நிலைகளே என்று அனைத்தையும் ஒன்றாகக் காணுகின்ற அத்வைதக் காட்சியை தருகிறது வேதாத்திரியம்.

கடலும் அதன் அலையும் போன்றதே பிரம்மாகி மெய்ப்பொருள் என்ற வெளியும் உயிர்களும் என்பதை வேதாத்திரி மகரிஷி தனது வேதாத்திரியத்தில்

"ஆதியென்ற பிரம்மது கடல் போல் ஒன்று
அதிலெழுந்த ஜீவனெல்லாம் அலைபோல் ஆகும்
பேதமுடன் அலைகளை விரிந்த போதும்
பிரியாது கடலைவிட்டுக் கடல் ஒன்றேனும்" (ஞாக.பா.1126)

கடல் என்று நாம் அழைப்பது ஒரு பெரிய நீர்த்தேக்கம். கடல் நீரின் மேல்புறம், அலைகளின் இயக்கத்தைக காண்கிறோம். கடல் நீரின் அடித்தளத்தில் நீர் அசைவற்று இருக்கிறது.

அதுபோல மெய்ப்பொருள் என்ற இறைநிலை அசைவற்று உள்ளது. மெய் அசைந்தால், இயங்கினால் உயிர் என்ற விண்ணாகி, விண்களின் கூட்டுச் சேர்க்கையால் பிரபஞ்ச உருவத் தோற்றங்கள் அனைத்துமாக ஆகி உள்ளது.

யுகம் யுகமாக மலர்ச்சி, முதிர்வு, முடிவு என்ற உருவத் தோற்றங்களாகி மாறிக கொண்டே இருக்கிறது.

அலையானது இயக்கம் முடிந்த பின் தனது முன் நிலையாகிய உடலையே சென்று அடைவது போல உருவத் தோற்றங்கள் அனைத்தும் யுகம் யுகமாகத் தோன்றி இயக்கம் முடிந்த பின் மெய்ப்பொருளாகி விடுகிறது.

தொடர்ந்து இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டே உள்ளது. ஆகவே மெய்பொருளே பிரபஞ்சமாகிறது. பிரபஞ்சமே மெய்ப் பொருளாகிறது. வாழ்க வளமுடன்

# 4. ஆனந்தமே மெய்ப்பொருள் (பிரம்மம்)

ஆனந்தம் பிரம்மம் (மெய்ப்பொருள்). ஆனந்தமே பரம்பொருள். ஆனந்தமே மெய்ப்பொருள். ஆனந்தத்திலிருந்தே நிச்சயமாக உயிர்கள் தோன்றியுள்ளன.

இகபரமும், உயிர்க்கு உயிரை. யான் எனது அற்
றவர் உறவை. எந்த நாளும்.

சுகபரிபூ ரணமான நிராலம்ப
  கோசரத்தைத். துரிய வாழ்வை
அகமகிழ வரும்தேனை முக்கனியைக்
  கற்கண்டை. அமிர்தை நாடி,
மொகுமொகுஎன இருவிழிநீர் முந்து இறைப்பக்
  கரமலர்கள் முகிழ்த்து நிற்பாம்.” (தா.பா.17)

- இம்மை மறுமை என இருமையிலும் உயிருக்கு உயிராய் விளங்கும் பொருளை.
- யான் என்னும் அகங்காரத்தையும்,
- எனது என்னும் மமகாரத்தையும் விட்டு நிற்பவர்க்கு உறவாய் விளங்கும் பொருளை.
- எப்பொழுதும் இடையறாத இன்பம் தருவதாய்.
- யாதொரு பொருளையும் பற்றி நில்லாது, தானே தோன்றிய பொருளை.
- துரியத்தில் இருப்பதான பொருளை.
- மனதில் மகிழ்ச்சியை உண்டாக்கும் தேன் போன்ற இனிப்புடைய பொருளை.
- மா, பலா, வாழை என்னும் முக்கனி போல இனிக்கும் பொருளை.
- கற்கண்டு போன்ற சுவையுடைய பொருளை.
- நீண்டநாள் உயிர்வாழ உதவும் அமுதம் போன்ற பொருளை விரும்பி,

பொலபொல என இரண்டு கண்களிலும் நீரை முத்து போல வாரி இறைத்து, கைகளாகிய மலர்களைக் குவித்து வணங்கி நிற்போமாக!

மெய்ப்பொருள் என்ற வெட்டவெளி, மனதில் மகிழ்ச்சியை உண்டாக்கும் என்கிறார் தாயுமானவர்.

## ஆனந்தமே பிரம்மம்.

வேதாந்தம் எனப்படும் தத்துவம் உபநிடதங்களின் சாரம். வேதங்களின் அந்தமாக விலங்கும் உபநிடதங்கள் இந்தப் பிரபஞ்சம் குறித்தும் அதன் ஆதாரம் குறித்தும் தேடலை மேற்கொள்கின்றன.

இந்தத் தேடலில் பல்வேறு தத்துவங்களும் கருதுகோள்களும் முன்வைக்கப்படுகின்றன.

கவித்துவமான முறையில் மிகச் சுருக்கமாகச் சொல்லப்படும் இந்தக் கருத்துகள் பல விதமான விவாதங்களுக்கும் விளக்கங்களுக்கும் வழிவகுக்கின்றன.

மனித வாழ்வையும் இந்தப் பிரபஞ்சத்துக்கும் அதற்கும் உள்ள தொடர்பையும் பற்றிச் சிந்திக்க விரும்புபவர்களுக்குப் பல விஷயங்களை அள்ளித் தருவது வேதாந்தம்.

“ஆனந்தோ ப்ரஉற்மேதி வ்யஜானாத்!
ஆனந்தாத்த்யேவ கல்விமானி பதானி ஜாயந்தே!
ஆனந்தேன ஜாதானி ஜீவந்தி!
ஆனந்தம் ப்ரயன்த்யபிஸம்விசந்தி!” (தைத்தியோசநிஷதம் 3 – 6)

ஆனந்தம் பிரம்மம் (மெய்ப்பொருள்) என்ற (சாதகன்) ஞானத் தெளிவடைந்தான். ஆனந்தத்திலிருந்தே நிச்சயமாக உயிர்கள் தோன்றியுள்ளன.

பிறந்தவையெல்லாம் ஆனந்தத்திலேயே வாழ்ந்திருக்கின்றன. இறுதியில் ஆனந்தத்திலேயே லயமடைகின்றன.

ஆனந்தமே பரம்பொருள். ஆனந்தமே மெய்ப்பொருள். அது யாருக்கும் தனி உரிமையாகாது.

அண்டங்கள் அனைத்தும் ஆனந்தத்தில் தோன்றி, ஆனந்தத்தில் நிலைத்திருந்து, ஆனந்தத்தில் ஒடுங்குகின்றன.

ஆனந்தத்தை அறியாதார் யார்? ஆனந்தமில்லாது யார் உயிர் வா ழ்ந்திருக்க முடியும்? உலப்பில்லா ஆனந்தத்தில் ஒன்றுபட்டிருப்பவர் பரமனை (மெய்ப்பொருள்) அடைந்தவர் ஆகின்றனர்.

மெய்ப்பொருளை புரிந்து, தெளிந்து, உணர்ந்து இறையுணர்வில் எழும் பேரின்பம் குறித்து வேதாத்திரியம் பாடுகிறது.

”இன்ப ஊற்று என நிறைந்த இறைவா” எனும் போதிலே
ஏற்படும் ஓர் இன்பமதை எவ்வாறு சொல்வேன்?
நன்மை தரும் நவகோள்கள், நட்சத்திரக் கூட்டம்,
நான் அகத்தே காணுகின்றேன் நடமாடும் காட்சியாய்!
உன் பெரிய, பேரியக்க, உவமையற்ற ஆற்றலால்,
உலகங்கள் அத்தனையும் உருளுதே ஓர் கொத்துபோல்!
தனமயமாய்த் தான் அதுவாய்த் தவறிடாதியக்கும் உன்
தன்மையினை எண்ண எண்ண, தவமது ஆனந்தமே” (ஞாக.பா.1652)

பேரியக்க மண்டலம் முழுவதும் நீக்கமற நிறைந்து எல்லா இயக்கங்களையும் திருவிளையாடலாக நிகழ்த்திக் கொண்டிருக்கும் வியத்தகு மறைபொருள் காந்தம்.

அந்தக் காந்தத்திற்கும் உட்பொருளாக இருப்பு நிலையாக அமர்ந்து, காந்தத் தன்மாற்றங்களாகிய அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் என்ற ஆறு விளைவுகளாகி உயிர்களுக்கெல்லாம் வாழ்க்கை

இன்பத்தை வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கும் உன்னை ”இன்ப ஊற்று என நிறைந்த இறைவா” என்னும்போது ஏற்படுகிற எனது இன்பப் பெருக்கை எவ்வாறு வார்த்தைகளால் சொல்வேன்?

விண் துகள்களின் கூட்டாக பஞ்சபூதங்கள் இருந்தாலும், விண், வெளி என்ற இரண்டின் விகிதாசாரக் கூட்டுக்கேற்ப ஒவ்வொரு பௌதீகப் பிரிவும் காந்த அலையின் தன்மையில் வேறுபாடுகளைக் கொண்டுள்ளது.

அதற்கேற்ப காந்தத் தன்மாற்றத்தின் அளவும் விளைவுகளும் ஒவ்வொரு பௌதீகப் பிரிவிற்கும் வேறுபடுகிறது.

இதற்கு பௌதீகப் பிரவுகளைக் கூட்டாகப் பெற்று, சூரியனைச் சுற்றி இயங்கிக் கொண்டு இருக்கும் ஒன்பது கோள்களும் நில உலகில் வாழ்கின்ற உயிரினங்களுக்கு எல்லாம் வாழ்வின் இன்பத்திற்கு வேண்டிய அலைகளை ஓயாமல் வீசி நன்மை அளிக்கின்றன.

இந்த ஒன்பது கோள்களையும் நட்சத்திரங்களாக சூரியன்களாகக் காண்கின்றபோது எனது உள்ளம் அவைகள் எல்லாம் நியதி தவறாமல் ஆடும் நடனக்காட்சியைப் போன்று உவப்பை அளிக்கிறது.

இறைவா நீயே உனது துண்டுபட்ட பக்தி நிலையில், பேரியக்க மண்டலத்தில் இயங்கும் பொருட்கள் எல்லாமாக இருப்பதால், உனது தன்மை அனைத்தும் ஒவ்வொன்றிலும் அமைந்துள்ளதால் நீயே எல்லாவற்றையும் நியதி தவறாமல் இயக்கி வருகிறாய்.

இந்தஉண்மைகளை உணர்ந்து, அதில் லயமாகின்ற மனநிலையே எனக்கு உயர்ந்த தவமாக அமைகின்றது.

## 5.மெய்ப்பொருளின் தன்மாற்றம்

நமக்கு உள்ளும் புறமுமாக எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் வெளியே மெய்ப்பொருள் என்ற தெய்வம் என்பதை உணர்ந்து, இந்த வெளி தன்னைக் கொண்டே தானாகவே அடைந்த தன்மாற்றமே இப் பிரபஞ்சம் என அறிவது ஞானம்.

அறிந்த ஞானத்தின் மீது அமையும் செயல்களெல்லாம் கர்மயோக வாழ்க்கை நெறிகள்.

ஜாதி, குலம். பிறப்பு இறப்புப். பந்தம் முத்தி.
அரு உருவத் தன்மை, நாமம்
ஏதும் இன்றி எப்பொருட்கும் எவ்விடத்தும்
பிரிவு அற நின்று இயக்கம் செய்யும்

ஜோதியை. மாத் தூவெளியை மனது அவிழ
நிறைவான துரிய வாழ்வைத்.
தீது இல்பரம் ஆம்பொருளைத் திரு அருளை
நினைவாகச் சிந்தை செய்வாம்." (தா.பா.18)

- சாதி, குலம், பிறப்பு. இறப்பு, பந்தம், வீடு, அருவம், உருவம், பெயர் என எதுவும் இன்றி.
- எல்லாப் பொருள்களிலும், எல்லா இடங்களிலும், பிரிப்பின்றி நின்று,
- அவற்றை இயக்கும் ஒளியை.
- பெரிய தூய வெட்டவெளியை.
- மனம் விரிவடையும்படி நிறைவான துரியத்தில் விளங்கும் பொருளை.
- குற்றமற்ற மேலான பரம்பொருளை.

திருவருளாகவே நினைத்து, மனத்தில் வைத்து வணங்குவோமாக!

மெய்ப்பொருளே எல்லாப் பொருள்களிலும், எல்லா இடங்களிலும், பிரிப்பின்றி நிற்கிறது என்கிறார் தாயுமானவர்.

வேதாத்திரியமோ, மெய்ப்பொருளின் தன்மாற்ற சரித்திரத்தை எளிமையாக பாமரனுக்கும் விளங்க வைத்துள்ளது.

"இருப்புநிலை சுத்தவெளி இறைவன் என்று உணர்வோம்.
இறைவெளியின் நுண்பகுதி இயங்கும்சுழல் அலைவிண்.
இருப்புநிலை இறைவெளியோடு இயங்கும் விண்உரச
எழுந்தஅலை விரிவலையாம். இதுநிழல் ஆம்அலையும்.
இருப்புநிலை விரிவுஅலை இரண்டிணையக் காந்தம்.
இக்காந்தத் தன்மாற்றம் இம்மூன்றாய்த் தோன்றி,
இருப்புநிலையில்அடங்கும். இதன்விளைவே எங்கும்
எல்லையிலாப் பேரண்டம். இயங்கும் அனைத்துயிர்கள்". (ஞாக.பா.1094)

இருப்பு நிலையாக, மெய்ப்பொருளாக உள்ள சுத்தவெளியை இறைவன் என்று உணர்ந்து கொள்வோம்.

சுத்தவெளியாகிய இறைவெளியில் ஒரு சிறிய பகுதியில் நுண்மையாக இயங்கும் சுழல்அலை தான் விண் ஆகும்.

இருப்பு நிலையாகிய இறைவெளியொடு, தற்சுழற்சி இயக்கம் கொண்ட விண் உரசுவதால் எழுந்த அலையே விரிவு அலை ஆகும். இந்த விரிவு அலையே விண் அசைவின் நிழலும் ஆகும்.

இறைநிலையும், அதன் அலையாகிய விரிவு அலை இரண்டும் இணைந்த மாபெரும் ஆற்றல் காந்தம் ஆகும்.

காந்தமானது தன் நிலையில் மாற்றமடையும் போது விண், விரிவலை, நிழல் அலை ஆகிய மூன்றாகத் தோன்றி இறைநிலையாகிய இருப்பில் அடக்கமாகி விடும்.

இந்த சேர்க்கையின் விளைவுகளே விரிந்து கொண்டே இருக்கக்கூடிய எல்லையில்லாத பிரபஞ்சமும் அதனுள் இயங்கும் அனைத்து உயிர்களும் ஆகும்.

ஆகவே இறைநிலை தனது ஆற்றலாலேயே, அறிவாலேயே தன் நிலையில் மாற்றம் பெற்று பிரபஞ்சமாகவும் சீவ இனங்களாகவும் ஆகியுள்ளது.

"தூயவெளி சுழல்அலையாம். தொடர்ந்த விரிவலையாய்
  தொடரணுக்கள் கூட்டத்தின் இடை அழுத்தமாகி,
மாயமாக மற்றநான்கு பூதங்களுக் குள்ளே,
  மருவிஒலி ஒளி சுவையாய் மணமுமாகி. மேலும்
காயமெனும் உடலுயிர்க்குள் கருது மனமாகி,
  கருத்துயர்ந்த மனிதனிலே மனத்துள் அறிவாயும்,
நேயமொடு அவ்வறிவே நிர்மலமாம் வெளியாய்
  நினைக்கும் பேரின்பநிலை மெய்யுணர்வு சிவமாம்." (ஞாக.பா.1095)

சுத்தவெளி தன் அறிவாலும் ஆற்றலாலும் எழுச்சி பெற்று சுழல்அலையாக இயங்குகிறது.

சுழற்சியாவதால் வெளி வரும் விரிவலையாக, தொடர்ந்து சுழன்று இயங்கிக் கொண்டுள்ள அணுக்கள் கூட்டத்தின் இடையில் அழுத்த ஆற்றலாகி. கண்களுக்கும் புலன்களுக்கும் எட்டா மாயா சக்தியாக, காற்று, வெப்பம், நீர், கெட்டிப் பொருள் ஆகிய நான்கு பௌதீகப் பிரிவுகளுக்கு உள்ளே கலந்து மருவி ஒலி, ஒளி என்ற மின் சக்தியாகவும் சுவை, மணம் என்னும் இரசாயனமுமாக மாறுகிறது.

மேலும் காயம் என்கின்ற உடல் உயிர்களுக்குள் எண்ணமாக, மனமுமாகிறது.

சிந்தனையில் உயர்ந்த மனித மனதின் அடித்தளம் அறிவாகவும் இருப்பு ஆகிறது.

அன்போடு அந்த அறிவானது தெளிவடைய வெளியாகவும் நினைக்கக்கூடிய பேரின்ப நிலையையும் அடைகிறது. இந்நிலையே சிவமாகிய மெய் உணர்வு நிலை ஆகும். வாழ்க வளமுடன்.

## 6. மெய்ப்பொருளே குருவாக வந்தார்.

மாணிக்கவாசகருக்கு ஈசனே குருவாய் வந்து உபதேசித்தார். தாயுமானவருக்கும் இறைவனே மௌனகுருவாக வந்து உபதேசித்தார்.

இந்திரஜா லம், கனவு, கானலின் நீது
  என உலகம் எமக்குத் தோன்றச்.
சந்தததமும்  சிற்பரத்தால் அழியாத
  தற்பரத்தைச் சார்ந்து வாழ்க!
புந்திமகிழ் உறநாளும் தடைஅற
  ஆனந்தவெள்ளம் பொலிக! என்றே
வந்து அருளும்  குருமௌனி மலர்த்தாளை
  அனுதினமும் வழுத்தல் செய்வாம்." (தா.பா.19)

- இந்திர ஜாலம், கனவு, கானல் நீர் ஆகிய இவைபோல பொய்யாய் இந்த உலகம் எனக்குத் தோன்ற,
- எப்பொழுதும் ஞானஉறுதி கொண்டு,
- என்றும் அழியாத தன்னில் தானாய் விளங்கும் பொருளைச் சார்ந்து வாழ்வாயாக!"  என்றும்.
- "புத்தியில் மகிழ்ச்சி உண்டாகும்படி தடையின்றி,
- நாளும் பேரின்ப வெள்ளம் பெருகி ஓடட்டும்!" என்றும்.

கூறி அருளிய மௌனகுருவின் திருவடித் தாமரைகளை நாள்தோறும் வாழ்த்தி வணங்குவோமாக!

தாயுமானவர் ஆனந்தகளிப்பு முதல் பாடலில் இறைவனுடைய இலக்கணத்தைக் கூறுகிறார். இப்படிப்பட்ட இறைவன் எனக்கு குருவாக வந்தார் என்று ஆனந்தக் களிப்பில் சொல்லுகிறார்.

"ஆதி அநாதியும் ஆகி – எனக்கு
ஆனந்த மாய்அறி வாய்நின்று இலங்கும்
ஜோதி மவுனியாய்த் தோன்றி – அவன்
சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி." (தா.பா.1423)

தோழி! தொடக்கமும் முடிவும் ஆகி, எனக்குப் பேரின்பமாய், அறிவாய், நின்று விளங்கும் பேரொளி மௌனியாய்த் தோன்றி, அவன் பிறர் சொல்லாத வார்த்தையைச் சொன்னான்.

ஆதியாக இருக்கின்ற, அநாதியாக இருக்கின்ற, ஆனந்தமாய் இருக்கின்ற, ஜோதி அறிவு சொரூபமாக இருக்கின்ற இறைவன், குருவாக மாறி உருவெடுத்து தோன்றி, சொல்லில் விளக்க முடியாத ஒரு தத்துவத்தை (சின்முத்திரையை) எனக்கு விளக்கினார்.

## எப்படிப்பட்ட கடவுள் வந்தார்?

1.ஆதியாக இருக்கின்றார் 2. அநாதியாக இருக்கின்றார் 3.ஆனந்தமாய் இருக்கின்றார் 4 அறிவு சொரூபமாக இருக்கின்றார் 5. சத் சொரூபமாக இருக்கிறார் .

## எப்படிப்பட்ட குருவாக வந்தார்?

அறிவாக, மௌனியாக வந்தார். பிரபஞ்சத்திலிருந்து விடுவித்துப் பேரானந்தமாகிய சிவானந்தமாக - மௌனகுரு வடிவத்தில் வந்தார். சின்முத்திரைதாங்கி மௌன குருவாக வந்தார்.

## எப்படிப்பட்ட வார்த்தையைச் சொன்னார்?

தெட்சிணாமூர்த்தி வடிவில் வந்து, சின்முத்திரையைக் காட்டி, ”சும்மா இரு” என்று குரு உபதேசம் செய்தார்.

## ஆதி

ஆதி என்றால் காரணம் என்று பொருள். உலக உற்பத்திக்கு காரணமானவன் என்று பொருள். வள்ளுவரும் ”ஆதி பகவன் முதலே உலகு” என்றார்.

## அநாதியும்

தன்னை அறிந்த பொழுது. அறிவின் பூரணம் பெற்று விட்டபொழுது, அதை ”வீடுபேறு” என்று சொல்லுவார்கள்.

வீடு என்றால் இடம் என்று பொருள். இடம் என்றால் எது இடம்? இப்பொழுது நாம் உட்கார்ந்து இருக்கின்றோம், நமக்குத் தரையானது இடமாக இருக்கிறது.

இந்தத் தரைக்கு எது இடம்? இந்த உலக உருண்டைதான் இடம். இந்தப் பூமிக்கு எது இடம்? ஆகாசம் தான் இடம்.

ஆகாசமாக உள்ள இந்தப் பேரியக்க மண்டலத்தில் பலகோடி உருவங்கள், கிரகங்கள், சூரியன், சந்திரன் எல்லாமே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இவற்றிற்கெல்லாம் இடம் எது என்று பார்க்கின்ற பொழுது, அதுதான் ”சுத்தவெளி” .

ஓர் ஆழ்வார் ”ஆழ்ந்து அகன்று ஓங்கி உயர்ந்த முடிவில் வெறும் பாழேயோ” என்று கடவுளைக் குறித்துப் பாடினார்.

கீழே போனாலும் சரி, பக்கவாட்டிலே போனாலும் சரி, எந்தப் பக்கம் போனாலும், இந்தப் பிரபஞ்சம் முழுவதும் எதில் இருந்து கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது?

அதற்கு அப்பாலும் விரிந்து போனால் என்ன இருக்கும்? ஆழ்ந்து, அகன்று, ஓங்கி உயர்ந்து முடிவில் வெறும் பாழ். அதுதான் இந்தப் பிரபஞ்சம் முழுமைக்கும் ”வீடு”. அனைத்திற்கும் ”வீடு” அதுதான். அனைவருக்கும் ”வீடு”.

அதுவே ”சுத்தவெளி”. அந்தச் சுத்த வெளிக்கு எது வீடு? எது இடம்? அப்படி எதுவுமே இல்லை. அதுவே அதற்கு வீடாகும்.

அதற்கு ஒரு வீடற்ற நிலை இருப்பதனால், வீடற்ற வீடாக இருப்பதனால் ”ஆதி” என்று அதற்குப் பெயர். அதற்கு ஒரு ஆதி இல்லாததனால் ”அநாதி” என்று மற்றொரு பெயர் ஏற்பட்டது.

இந்த நிலையை உணர்ந்து கொண்ட பிறகு, அந்த நிலையிலேயே நின்று, நின்று மனம் லயிக்க முடியும்.

குருவானவர் உருவத்தில் மனிதர் – அரூபத்தில் தெய்வம்” என்பது வேதாத்திரியம்.

இந்த அரும்பிறவியில் முன் வினையறுத்து எல்லையில்லா மெய்ப்பொருளை அடைவதற்கு வந்த ஒரு உதவி குரு உயிரின் சேர்க்கை வணங்கி குரு திருவடியை வாழ்த்தி வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 7. மனிதன்–ஆணவம் = மெய்ப்பொருள்

ஒரு பஞ்சப் பரதேசி, துறவி, சொத்து சுகம் ஏதுமற்ற ஞானி.

குளிர்காலத்தில் வெயில் காய்வதற்காக ஆற்று மணலிலே துண்டை விரித்து அவர் படுத்திருந்தார்.

உலகத்தையே வெல்லப் புறப்பட்ட மகா அலெக்சாண்டர் அவன் அருகிலே வந்தான்.

ஞானி அவனைக் கவனிக்கவில்லை.

கால்மேல் கால் போட்டபடி சூரிய கிரணங்களில் குளித்துக் கொண்டிருந்தார்.

`நான் அலெக்சாண்டர் வந்திருக்கிறேன்!' என்றான் அவன்.

`அப்படியா?...' என்று சாதாரணமாகச் சொன்னார் ஞானி.

`ஏ, ஞானியே! உனக்கு என்ன வேண்டும், கேள்; நான் தருகிறேன்!' என்றான் அலெக்சாண்டர்.

`எனக்கு ஒரு உதவி வேண்டும்,' என்றார் ஞானி.

`என்ன வேண்டும்? பொன் வேண்டுமா? பொருள் வேண்டுமா, மாளிகை வேண்டுமா?' என்று கேட்டான்.

`ஒன்றும் வேண்டாம். நீ கொஞ்சம் விலகி இருக்க வேண்டும். உன் நிழல் வெயிலை மறைக்கிறது' என்கிறார் ஞானி.

அலெக்சாண்டர் என்றால் உலகமே நடுங்கும்; ஞானி நடுங்கவில்லை.

அலக்சாண்டரின் ஆணவத்தை, ஞானியின் ஆணவம் தோற்கடித்தது.

காரணம், ஞானிக்குத் தேவை என்று எதுவுமில்லை.

யாரிடமிருந்தும் எதையும் எதிர்பாராத ஆணவம், தன்னம்பிக்கை.

ஆசை வயப்பட்ட ஆணவம், திமிர்.

அறியாமை ஆகிய ஆணவமலம் விலகி நின்றால் நாமும் தெய்வமாகலாம்.

பொருளாகக் கண்டபொருள் எவைக்கும் முதல்
  பொருளாகிப் போதம் ஆகித்
தெருள் ஆகிக் கருதும் அன்பர் மடிதீரப்
  பருகவந்த செழந்தேன் ஆகி.
அருள் ஆனோர்க்கு அகம்புறம் என்று உன்னாத
  பூரணஆ னந்த ஆகி.
இருள்தீர விளங்கு பொருள் யாது? அந்தப்
  பொருளினையாம் இறைஞ்சி நிற்பாம்." (தா.பா.20)

- பொருள் என்று கண்ணால் காணப்பட்ட பொருள்கள் அத்தனைக்கும்,
- முன்னமே விளங்கும் பொருள் ஆகி.
- பின்னர் ஞானம் ஆகி. அதனால் பெறும் தெளிவு ஆகி.
- மனதால் நினைக்கும், மெய்யடியார்களது வறுமை நீங்க,
- அவர் பருகுவதற்கு வந்த செழுமையான தேன் ஆகி.
- நுமது திருவருள் வாய்க்கப் பெற்ற அன்பர்களுக்கு உள்ளத்திலும் புறத்திலும் என்று வேறுபடுத்தி அறிய முடியாத முழுமையான பேரின்பம் ஆகி.

அறியாமை ஆகிய ஆணவமலம் விலகி நிற்க, விளங்கும் பொருள் எதுவோ, அந்தப் பொருளினை, யாம் வணங்கி நிற்போம்.” என்கிறார் தாயுமானவர்.

மனிதனிடமுள்ள தன்முனைப்பு போகும் என்கிறது வேதாத்திரியம்.

”இறைநிலையே பேரறிவாய் எல்லாப் பொருட்களிலும்,
இடையற்றும் உட்புறமும் இணைப்பியக்க மாயுள. அம்
மறைபொருளே அணுமுதலாய், அண்டபிண்டம்அனைத்தாய்,
மாபெரிய பேரண்டமாய் மலர்ந்து, அது அதனில்
நியைறிவாய் ஒழுங்கமைப்பாய் நெறியொடு இயங்கும்,
நேர் அறியச் சீர் அறிவைப் பெற்றவனே மனிதன்,
முறையாக அத்தவத்தால் அறிவிறந்த பேற்றில்,
முழுமுதற் பொருள்விளங்கும், தன்முனைப்பும் போகும்.” (ஞாக.பா.1588)

இறைநிலையானது பேரறிவு ஆகும். அந்தப் பேரறிவானது, தோற்றப் பொருட்கள் அனைத்திலும் வேறுபாடு இல்லாமலும், உட்புறமாகவும் இருந்து எல்லாவற்றையும் இணைத்துக் கொண்டுள்ள இயக்கமாகவும் உள்ளது.

இருக்கிறது என்று சொல்லத்தான், உணரத்தான் முடியும். எடுத்துக் காட்ட முடியாத, புலன்களுக்கு அப்பாற்பட்டவை மறைபொருள் ஆகும்.

மறைவாக இருப்பதால், மறைபொருள் எனப்படும். மறைபொருளே இயக்கமாகும்போது அணுவாகி, அணுவின் கூட்டுச் சேர்க்கையால் பெரும் பெரும் கோள்களாகி, சடப்பொருள், சீவன் என்று அனைத்துமாகி பேரியக்க மண்டலமாக மலர்ந்தது.

அந்த மறைபொருளே தோற்றங்கள் அனைத்திலும் நிறை அறிவாகவும், இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற இயக்க ஒழுங்கில் நெறியோடு செயல்படுகின்றது.

இவற்றை எல்லாம் அறியக்கூடியதான, சிறப்பான ஆறாவது அறிவைப் பெற்றவன்தான் மனிதன்.

அகத்தவத்தை முறையோடு இயற்றுவதால், அறிவை அறியும் பேறு கிட்டும். அந்த அறிவே முழுமுதற் பொருளான இறைநிலை என்பதும் அறிவிற்கு விளக்கமாகும்.

அதனால் மனிதனின் துன்முனைப்பு ஒழிந்து விடும். தன்முனைப்பு ஒழிந்தால் இறையுணர்வு பெற்று ஆனந்தமாக வாழலாம்

## 8. மெய்ப்பொருள் முழுமைப் பொருள்

“மனிதன் என்ற தத்துவத்தை நான்கு சிறப்பு நிலைகளாகப் பிரிக்கலாம். அவை 1) உடல் 2) உயிர் 3) மனம் 4) மெய்ப்பொருள் என்பனவாகும்.

இந்நான்கும் பொருள் நிலையில் ஒன்றுதான். ஆனால் இயக்கச் சிறப்புகளால் பிரித்து உணரத்தக்கவையாக இருக்கின்றன.

ஒரே பொருள் அதன் இயல்பான பரிணாம உணர்ச்சியால் நான்கு நிலைகளையும் அடைந்து ஒன்றில் ஒன்றாக நான்கும் இணைந்து இயங்கும் சிறப்பே மனிதனாக விளங்குகின்றது.

உடல் என்பது ஆற்றலின் (Mass) திரட்சியே. ஆற்றல் (Energy) என்பது மெய்ப்பொருளின் இயக்க நிலையே.

மெய்ப் பொருள் தான் ஆற்றலுக்கு நிலைக்களம் (Static State). இதனை வெட்டவெளி என்கிறோம்.

வெட்டவெளியே தனது இயக்கத்தில் ஆற்றல் ஆகிறது. ஆற்றலின் திணிவு உடல். உடலில் நிறைந்த ஆற்றல் உணர்ச்சியெனும் சிறப்புற்று உடலை உணர்ந்து, பேரியக்க மண்டல தோற்றங்களை உணர்ந்து, உணரும் ஆற்றலான உயிரையும் உணர்ந்து முடிவாகத் தனது மூல நிலையான மெய் நிலையை நிலைக்களனாக உள்ள ஆதிநிலையை உணர்ந்து முழுமை பெறுகிறது.

உணர்ச்சியிலிருந்து முழுமை பெறும் வரையில் நடைபெறும் சிறப்பாற்றல் தான் மனம் (Mind) என்றும் அறிவு (Consciousness) என்றும் வழங்கப்படுகின்றது.

எனவே மெய்ப்பொருள், ஆற்றல், தோற்றம், மனம் (Truth, Energy, Mass, Consciousness) என்ற நான்கு நிலைகளும் ஒரு பொருளின் பரிணாம வளர்ச்சியின் வேறுபாடுகளே. இந்த விளக்கத்தையே பேரியக்க மண்டல இயக்கங்கள் அனைத்தையும் மதிப்பிட அடிப்படையாகக் கொள்ளலாம்.

நுண்ணிய இயக்க ஆற்றலான பரமாணு முதல் பெரும் பெரும் நட்சத்திரங்கள் உட்பட மனதில் கொண்டு ஆழ்ந்து ஆராய்ந்தால் ஒரு பேருண்மை விளங்கும்.

ஒவ்வொரு அணுவும் அல்லது அணுக்கொத்தும் தன்னியக்கம், தொடரியக்கம், பிரதிபலிப்பு இயக்கம், விளைவு என்ற நான்கு வகையான தன்மைகளோடு இயங்குகின்றன. எந்த ஒரு இயக்கமும் தனியாகத் துண்டுபட்டு நடைபெறுவதில்லை.

பேரியக்க மண்டலம் என்ற கோர்வையில் அமைந்துள்ள இயற்கை ஒழுக்கமைப்பை நாம் காரண-விளைவு நியதி (Causes and effect system) என்று கூறுகிறோம்.

இந்த விளைவின் கீழ் தோன்றிய மனிதனின் நோக்கம் அறிவின் முழுமை பெற்று அமைதி பெறுவதேயாகும்.

அறிவின் முழுமைக்கு வாழ்க்கை அனுபவம் வேண்டும். அவ்வனுபவத்திற்கு உடல் என்ற நற்கருவியை நன்றாகப் போற்றி காத்து பயன்படுத்த வேண்டும்.

எனவே மனிதன் தனது நோக்கத்தை ஒட்டி இயல்பாக வாழ்ந்து அமைதியும் மகிழ்ச்சியும் பொறுப்போடு காப்பது என்ற இரண்டு வகையிலும் உணர்ந்தாற்ற வேண்டும்."

அருமறையின் சிரப்பொருளாய். விண்ணவர், மா
  முனிவர், சித்தர் ஆதி ஆனோர்
தெரிவரிய பூரணமாய்க். காரணம் கற்
  பனைகடந்த செல்வம் ஆகிக்
கருதரிய மலரின்மணம், எள்ளில் எண்ணெய்,
  உடல் உயிர்போல கலந்து, எந் நாளும்
துரியநடு ஊடிருந்த பெரியபொருள்
  யாது அதனைத் தொழுதல் செய்வாம்." (தா.பா.21)

- அரிய வேதங்கள் எடுத்துரைக்கும் தலைமை பொருளாய்.
- தேவர்கள், பெரிய முனிவர்கள், சிததர்கள் முதலிய யாவராலும் தெரிந்து கொள்ள முடியாது. முழுமைப் பொருளாய்.
- ஏதுக்களையும் புனைந்துரைகளையும் கடந்து நிற்கும் செல்வமாய்.
- எண்ணுதற்கு அருமை உடையதாய்,
- மலரில் மணம் போலவும்,
- எள்ளுக்குள் எண்ணெய் போலவும்,
- உடலில் உயிர் போலவும்,

பிரிப்பின்றி எப்பொழுதும் துரியத்தின் நடுவில் வீற்று இருக்கும் பெரிய பொருள் எதுவோ, அந்தப் பொருளை வணங்குதல் செய்வோம்.

"மெய்ப்பொருளை சுத்தவெளியாய் உணர்ந்து கொண்டால்
  மேலான அதன்தன்மை முற்றறிவு ஆகும்.
மெய்ப்பொருளின் நுண்பிளவு விரைவே விண்ணாம்
  மேவியஅவ் விண்ணினையே எல்லை கொண்டு
மெய்விரிந்த ஐம்பூதம் உணர்ச்சி உள்ள
  மிகச்சிறந்த உயிரினங்கள் அனைத்திலும் நான்.

மெய்யுணரும் மனிதன்வரை வேறுபாடு
  மேல்விரிந்து பூரணமாம் அறிவின் போக்கே!" (ஞாக.பா.1223)

மெய்ப்பொருளான வெட்டவெளி முழுமைப் பொருளாகவும், எல்லாம் வல்ல தெய்வமாகவும் இருப்பதை வேதாத்திரியம் பதிவு செய்துள்ளது.

உமது செயலன்றி, தமது செயல் என எதுவும் செய்வதில்லை என்பதை உணர்ந்த தாயுமானவர், மெய்ப்பொருளே முழுமையானது என்ற தத்துவத்தை மானுடத்திற்கு சொல்லியுள்ளார்

தாயுமானவர் சொன்ன சிந்தனையை வேதாத்திரிய வழியில் ஏற்போம்.

அவர்கள் வழியில் செல்வோம். ஆனந்தமடைவோம்! ஆனந்தம் – ஆனந்தம்- ஆனந்தமே!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!!

# 9. பூதம் எல்லாம் தன் அகத்தில் வெளியாய்.

பிரபஞ்ச சக்திகள் அனைத்தும் மனிதன் உட்பட அனைத்து ஜீவராசிகளிலும் நிறைந்துள்ளது.

இதனால்தான் திருமூலர் ஊண் உடம்பே ஆலயம் என்றார். இந்த வாத பித்த கபம் எவ்வாறு மனித உடலில் உள்ளது என்பதையும் வாத பித்த கப நிலைப்பாட்டின் தன்மையை இந்த பிரபஞ்சத்தில் ஐம்பூதங்களான மண், காற்று, நீர், நெருப்பு, ஆகாயம் இவற்றின் பிரதிபலிப்பு ஒவ்வொரு உயிரிலும் நிறைந்துள்ளது.

"அண்டத்திலுள்ளதே பிண்டம்
பிண்டத்திலுள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமு மொன்றே
அறிந்து தான் பார்க்கும் போதே"

என்று சித்தர் பாடுகிறார். பொதுவாக எலும்புக்கூடு, நரம்பு, தசை, தமனி, முதலானவைகள் தான் மனிதன் என்று சொல்வது அறியாமை என்கின்றனர் சித்தர்கள்.

அண்டத்தில் அதாவது பிரபஞ்சத்தில் உள்ளது அனைத்தும் பிண்டத்தில் உள்ளது என்கிறார்.

பிண்டம் என்றால் உடம்பைக் குறிக்கும்.பிரபஞ்ச சக்தியானது உடலில் கரு உற்பத்திக்கு முக்கிய காரணமாகிறது.

சுக்கிலமும் சுரோனிதமும் இணையும்போது, காற்று நீர், நெருப்பு மூன்றும் சேர்ந்து மண் உருவு கொண்டு உடலாய் மாறி உயிர் சேர்ந்து வாதம், பித்தம், கபம் என நிலைப்படுகின்றது.

இவ்வாறு பஞ்ச பூதங்களுள் அமைந்துள்ள உடலானது உலகில் உள்ள தாதுப்பொருட்கள் தாவரப் பொருட்கள் அனைத்தும் சங்கமமாகின்றது.

மனித உடல் ஐம்பெரும் பூதங்கள் அடங்கிய சிறிய பிரபஞ்சம் என்றே சித்தர்கள் கூறுகின்றனர்.

மேலும் மனித உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்பும் பிரபஞ்சத்தில் உள்ள பொருட்களோடு தொடர்புடையதாகவும், இந்த தத்துவங்களின் அடிப்படையில்தான் மனித உயிர் அனைத்து சக்திகளையும் அடக்கி ஆளும் தன்மை கொண்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.

சூரிய சக்தியானது மனிதனின் தமரகம் என்னும் இதயத்துடன் தொடர்புடையது என்றும், மூளை நரம்புகள் அனைத்தும் சந்திரனோடு தொடர்பு உடையவை என்றும், பித்தப்பை இரத்தம், செவ்வாயோடு தொடர்பு உடையவை என்றும் உடலை பிரபஞ்சத்துடன் ஒப்பிட்டுள்ளனர்.

- சூரிய சக்தி – தமரகம் (இதயம்)
- சந்திர சக்தி – மூளை நரம்புகள்
- செவ்வாய் – பித்தப்பை, இரத்தம் (செந்நீர்)
- சுக்கிரன் – இடுப்புப் பகுதி
- புதன் – நுரையீரல்
- குரு (வியாழன்) – கல்லீரல்
- சனி – மண்ணீரல்

ஆகாயம். காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகிய ஐந்து பூதங்களையும் தன்னகத்தே அடக்கி நிற்கும் வெட்ட வெளியாய் உள்ளது மெய்ப்பொருள் என்று பாடுகிறார் தாயுமானவர்.

விண்ணாதி பூதம் எல்லாம்  தன் அகத்தில்
  அடக்கிவெறு வெளியாய். ஞானக்
கண்ணாரக் கண்டஅன்பர் கண்ணூடே.
  ஆனந்தக் கடலாய். வேறு ஒன்று
எண்ணாத படிக்கு இரங்கித் தானாகச்
  செய்து அருளும் இறையே! உன்தன்
தண்ணாருஞ் சாந்தஅருள் தனைநினைந்து
  கரமலர்கள் தலைமேல் கொள்வாம்.” (தா.பா.22)

- ஆகாயம். காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகிய ஐந்து பூதங்களையும் தன்னகத்தே அடக்கி நிற்கும் வெட்ட வெளியாய்.
- ஞானக்கண் கொண்டு கண்ட மெய்யடியார்களது கண்கள் நிறையுமாறு,
- பேரின்ப வெள்ளத்தைக் கடல்போல தேக்கி,

- வேற எதனையும் நினைக்காதபடி இரக்கம் காட்டி,
- (உயிரை) தானாகச் செய்து அருளும் கடவுளே!

உன்னுடைய குளிர்ச்சி பொருந்திய திருவருளை நினைவு செய்து, கைம் மலர்களை தலைக்கு மேல் கூப்பி வணங்குவோம்.

பஞ்ச பூதங்களின் சரிவிகிதக் கலவையால் சீவ இனங்கள் தோன்றியது என்பது வேதாத்திரிய இறை சரித்திரம்.

"பஞ்ச பூதங்கட்கு அப்பால் ஒன்றுண்டு எனில்
  பரம் பொருளாம் வெட்ட வெளியே!
பஞ்ச பூதங்களோ விண்என்ற நுண்துகள்கள்
  பல சேர்ந்த கூட்டியக்கம்.
பஞ்ச பூதங்களில் முதலான விண்நிலைதான்
  பரம அணு. உயிரும் ஈதே!
பஞ்ச பூதங்களும் சித்தாகும். பரம்சத்தாம்.
  பாச அறிவ   னந்த மாகும்." (ஞாக.பா.1034)

இறைநிலை என்ற முழு முதல் பொருளானது - 1. வற்றாயிருப்பு 2. பேராற்றல் 3. பேரறிவு 4. காலம் என்ற நான்கு வளங்களைக் கொண்டு பெருவெளியாக நிறைந்து விரிந்து திகழ்கிறது.

இதன் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் தானே நுண்துகளானது. இதுவே இறைத்துகள் எனப்படுகிறது. இறைத்துகள்களின் தொகுப்பே விண்.

விண் என்னும் நுண்ணணுக்கள் ஒன்றை மற்றொன்று தள்ளுகிற ஆற்றல் குறையும் போது அவைகள் நெருங்குகின்றன.

நெருக்கத்தில் அழுத்ததிற்கு ஏற்ப காற்று, அழுத்தக் காற்று (நெருப்பு), நீர், நிலம் என்று விண்கள் கூட்டு இயக்கத்தில் வேறுபாடுகள் உண்டாகின்றன. இந்த நான்கோடு விண்ணையும் சேர்த்து பஞ்ச பூதங்கள் எனப்படுகின்றன.

பஞ்ச பூதங்களின் சரிவிகிதக் கலவையால் சீவ இனங்கள் தோன்றியது.

தாவரங்ள் தோல் மூலம் அழுத்தம் என்ற உணர்வைப் பெறுகின்றன. அதனால் அவை ஓரறிவு இனம் எனப்படுகிறது.

புழு அழுத்த உணர்வும் சுவையுணர்வும் உடையது. அதனை ஈரறிவு என்று மதிக்கிறோம்.

எறும்பு, வண்டுகள்  அழுத்தம், சுவை, மணம் என்ற மூன்று உணர்வுகளைப் பெற்றிருக்கின்றன.  எனவே இவை மூவறிவு இனமாக பேசப்படுகின்றன.

ஊர்வனவற்றில கண்களிருந்து, காதுகள் இல்லாதவற்றை (பாம்பு முதலியன) நான்கு அறிவு உயிரினம் என்றும், காதும் உடைய உயிர் வகையை ஐயறிவு என்  றம் கருது   கறோம்   .

ஆகவே நிற்பன, நடப்பன, ஊர்வன, நீந்துவன அனைத்தும் ஐயறிவு உயிர்களாகும்.

புலன்களுக்கு எட்டாத காலம், தொலைவு, விரைவு, பருமன் என்னும் நான்கு கணக்குகளுக்கு அகப்படாத மறைபொருட்கள் மூன்று - பேரியக்க மண்டலம் முழுவதும் நிரம்பியுள்ளன.

அவை 1.இறைவெளி 2. விண்துகள் 3. காந்த ஆற்றல்.  இந்த மூன்றையும் உணர்ந்து கொள்ளும் கருவி மனித மூளைதான். இந்த அற்புத ஆற்றல்தான் ஆறவாது அறிவு ஆகும்.

ஆறாவது அறிவு போதிய வளர்ச்சி பெற்றால்தான் மனிதனுக்குப் பிறரை மதித்து ஒத்தும் உதவியும், இட்டுண்டு வாழும் ஏற்றமுள்ள அறிவாட்சித்தரம் பண்பாடாக அமையும்.

எனவே. ஏதோ ஒரு ஆற்றல் உலகைப் படைத்து பாதுகாப்பும், பராமரிப்பும் அளித்து வருகிறது என்ற கருத்தை விட, மெய்ப்பொருளான இறைநிலையே தன்மாற்றம் பெற்று, பிரபஞ்சத் தில் காணும் பொருட்களாகவும்.அண்டங்களாகவும் கோடிக்கணக்கான உருவங்களாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற பேருண்மையை உணர்த்துவதே வேதாத்திரியம் தரும் தன்மாற்றச் சரித்திரம்.

## 10. பேரன்பால் உள் உருகி மொழிகுழறி……

ஜீவாத்மாக்கள் ஒரு புறம்; அவற்றைப் படைத்த பரமாத்மா மறுபுறம். ஜீவாத்மா பரமாத்மாவை அடைய வேண்டும் என்றால் பரமாத்மாவைச் சரண் புக வேண்டும் என்பதுதான் சரணாகதி.

ஆனால், இந்த சரணாகதியை நேரடியாக ஒருவரால் அடைய முடியாது. ஆசார்யன் என்ற வழிகாட்டி அவசியம். அவர்தான் பரிபூரண

பிரம்மத்தை அனுபவிப்பதற்கான சாதனை வழி முறைகளைச் சொல்லித் தர முடியும்.

இறைவனைச் சரண் புகுவதன் நோக்கமே பிறப்பு - இறப்பு என்ற இடையறாத சங்கிலித் தொடரிலிருந்து விடுதலை பெறுவதுதான். இதை மோட்சம் என்பார்கள்.

'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உற்றோமே யாவோம்... உமக்கே நாம் ஆட் செய்வோம்' என்று திருப்பாவை பாசுரத்தில் சரணாகதியைச் சுருக்கமாகத் தெரிவிக்கிறார் கோதை நாச்சியார்.

மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்' என்றும் 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்' என்றும் சரணாகதி என்பது அடிபணிவது என்று வள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ |
அஹம் த்வாம் ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சு ச: ||
தர்மங்களை எல்லாம் என்னிடம் ஒப்படைத்து என்னை (ஒருவனையே) சரணடைக. நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன்

என்று பகவத் கீதையில் கிருஷ்ணன் அர்ஜுனனிடம் கூறுகிறார்.

“நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்” என்னும் விவிலிய வாசகத்தையும் இங்கே நினைவு கூரலாம்.

பகவத் கீதையில் வரும் இன்னொரு ஸ்லோகமும் சரணாகதி தத்துவத்தைத் தெளிவாக எடுத்துரைக்கிறது:

அனன்யாஸ் சிந்தயந்தோமாம் யே ஜனா: பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபி யுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்.
“என்னைத் தவிர வேறு எதனையும் எண்ணாமல், என்னிலே உறைந்து, என்னையே சார்ந்து வாழ்கிறவனுக்குத் தேவைப்படுகிற அனைத்தையும் நான் அளித்துவிடுகிறேன்.” (கீதை 9-22)

”காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி

ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உயிப்பது
வேதம் நான்கிலும் மெய் பொருளாவது
நாதன் நாமம் நமசிவாயவே" – (திருஞானசம்பந்தர்)

இறைவனை "காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி" உருகி உருகி வணங்க வேண்டுமென்று திருஞானசம்பந்தர் பெருமான் வேண்டுகிறார்.

தாயுமானவர் வெட்டவெளி என்ற மெய்ப்பொருளிடம் சரணடைகிறார். அவரது மனவெளியில் இறைநிலை கலந்துவிடுகிறது. அதுவாகி அதுவாகவே மாறியவர் நம் தாயுமானவர்.

"விண்நிறைந்த வெளியாய். என் மனவெளியில்
  கலந்து, அறிவாம் வெளியின் ஊடும்
தண் நிறைந்த பேரமுதாய்ச் சதானந்தம்
  ஆனபெருந் தகையே! நின்பால்
உள் நிறைந்த பேரன்பால் உள் உருகி.
  மொழிகுழறி, உவகை ஆகிக்
கண் நிறைந்த புனல் உகுப்பக், கரமுகிழ்ப்ப
  நின் அருளைக் கருத்தில் வைப்பாம்." (தா.பா.23)

- ஆகாயத்தையும் தன்னகத்தே கொண்ட வெட்ட வெளியாய்.
- எனது மனமாகிய வெளியில் கலந்து,
- அறிவாகிய வெளியிலும் குளிர்ந்த மேலான அமுதமாக வந்து பொருந்தி,
- எப்பொழுதும் பேரின்பத்தை விளைவிக்கும் மகாதேவே!
- நின்னிடத்தில் கொண்ட உள்ளம் நிறைந்த பேரன்பால்,
- அவ்வெள்ளத்தை உருகச் செய்து,
- வார்த்தை தடுமாற,
- மகிழ்ச்சி அடைந்து,
- கண்களில் மிகுதியும் நீர் சொரிய,
- கைகளைக் குவித்து,

நின் திருவருளை எண்ணத்தில் நிறுத்தி வணங்குவோம் என்கிறார் தாயுமானவர்.

மனமாகிய வெளியில் மெய்ப்பொருள கலந்து இருக்க என்ன செய்ய வேண்டும்? மெய்யுணர்வு பெற வேண்டும் என்கிறது வேதாத்திரியம்.

"அணுவாயும், தனித்தனியே இயங்கிக் கொண்டு
  ஆறாகவும் காட்சி அளிக்கும் நீர் போல்
அணுவாயும் கூட்டுறவாய்க் காட்சி யாகும்
  அகண்ட பேரண்டத்தில் தோற்ற மெல்லாம்.
அணுநிலையை பருஉருவில் உணர வல்ல
  அறிவுதான் உயிருணர்வாம். அதற்கு மேலும்

அணுவுக்கு ஆதிநிலை பிரம்மம் என்று
  ஆழ்ந்துணர்ந்த அறிவே மெய்யுணர்வு ஆகும்." (ஞாக.பா.1403)

மெய் உணர்வு என்றால் உண்மை உணர்வு ஆகும். புலன்களுக்கு அப்பாற்பட்டதான அந்த உண்மையை ஆறாவது அறிவின் துணை கொண்டு உணரத்தான் முடியும்.

தண்ணீர் என்பது நீரக அணுக்களின் கூட்டு சேர்க்கை ஆகும். அணு என்பது தனித்தனியாகவும் இயங்கிக் கொண்டுள்ளது.

அணுவின் கூட்டுச் சேர்க்கையில் நீராகி, ஆறு, குளம், குட்டை என்றும் காட்சியளிக்கிறது.

அதுபோல பேரியக்க மண்டலத்தில் அணுவாகவும், அணுக்களின் கூட்டு இயக்கமாகவும் தோற்றப் பொருட்களாகவும் காட்சியளிக்கிறது.

கண்ணுக்கும் புலன்களுக்கும் காட்சியளிக்கின்ற பரு உடலுக்குள் அணுநிலையை உணரவல்ல அறிவே உயிர் உணர்வாகும்.

அதற்கு மேலாக அணுவிற்கு மூல நிலை, ஆதிநிலை பிரம்மம் (மெய்ப்பொருள்) என்ற சுத்தவெளி என்பதை கூர்ந்து உணர்ந்த அனுமான அறிவே, மெய் உணர்வாகும்.

# 11.மெய்ப்பொருளை காட்டுபவர் குரு

நான்மறைகளின் நாயகனை எப்படி உணர்வது?
யார் உணர்த்துவிப்பது?

இதற்கு ஒரு குரு வேண்டுமல்லவா?
யார் அந்த குரு?

- புலஸ்தியருக்கு அகஸ்தியர் போல,
- புலிப்பாணிக்கு போகர் போல,
- ராகவேந்திரருக்கு விஜயதீர்த்தர் போல,
- ஸ்ரீராமகிருஷ்ணருக்கு தோத்தாபுரி போல,
- விவேகானந்தருக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் போல.
- சகோதரி நிவேதிதைக்கு விவேகானந்தரைப் போல
- தாயுமானவருக்கு மௌனகுருவைப் போல,
- நமக்கெல்லாம் வேதாத்திரி மகரிஷியைப் போல

ஒரு ஞான குரு அமைய வேண்டுமே!

உள்ளத்துள் ஓங்கிய தேடுதல் இரவுபகலாக வெள்ளத்தைப்போல் பெருகினால் குரு தானாக வருவார்.

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே. (கந்தர் அனுபூதி)

ஞான சம்பந்தருக்கு மூன்று வயதில் வந்தான்.

திருநாவுக்கரசருக்கு 80 வயதில் வந்து அருள் தந்தான்.

என்ன சொல்லுவது?

யார் குரு என்று எப்படி அறிவது?

ஆதி சங்கரருக்கு புலையனாக வந்தான்.

சங்கரர் அறிந்தார் இல்லை.

அவர் பாடு அப்படி என்றால், நாம் எம்மாத்திரம்?

மாணிக்க வாசகருக்கு அருள் புரிய வந்தான், மணிவாசகர் அறிந்தார் இல்லை. விட்டு விட்டார்.

அவன் உருவாய், அருவாய், உளதாய், இலதாய், மருவாய், மலராய், மணியாய், ஒளியாய் எப்படி வேண்டுமானாலும் வருவான்.

அவன் வந்தால்தான் உண்டு. நாம் போய் கண்டு பிடிக்க முடியாது.

மனம் பக்குவப் பட வேண்டும்.

தாயுமானவர் பக்குவப்பட்டு இருந்தார். எதிரே வந்த மௌனகுருவை தாய்போல சிக்கெனப் பிடித்துக் கொண்டார்.

ஆதிஅந்தங் காட்டாத முதலாய். எம்மை
  அடிமைக்கா வளர்த்து எடுத்த அன்னை போல
நீதிபெறும் குருஆகி. மனம் வாக்கு எட்டா
  நிச்சயமாய்ச், சொச்சமதாய், நிமல ம் ஆகி
வாதம் இடும் சமயநெறிக்கு அரியது ஆகி,
  மௌனத்தோர் பால்வெளியாய் வயங்கா நின்ற
சோதியை. என் உயிர்த் துணையை நாடிக் கண்ணீர்
  சொரியஇரு கரங்குவித்துத் தொழுதல் செய்வாம்" (தா.பா.24)

- தொடக்கமும் முடிவும் இல்லாத மூலமாய்.
- எம்மை அடிமை கொள்ளும் பொருட்டு, நியாயம் தவறாத பெரும் குருவாக தாய்போல் வந்து.
- மனம், வாக்கு ஆகியவற்றுக்கு எட்டா உண்மைப் பொருளாய்.

- மாசு அற்றதாய்.
- மலமற்றது ஆகி.
- தர்க்கம் செய்யும் சமய நெறிகளுக்குப் புலப்படாத அருமை உடையது ஆகி.
- மோன நிலையில் நிற்போரிடத்து வெளியாக.
- விளங்குகின்ற பேரொளியாகி.

எனது உயிருக்கு உற்ற துணையாகி நிற்கும் பொருளை விரும்பி, கண்களில் நீர் ஒழுக, இரண்டு கைகளையும் கூப்பி வணங்குதல் செய்வாம்.

குருவினது தொட்டுக் காட்டல் மூலம் அனைத்தும் ஆகி இறைநிலையாய் இருப்பதை நாம் உணரலாம் என்கிறது வேதாத்திரியம்.

"குருவினது விரல்பட்ட உடனே, ஆங்கோர்
  குறுகுறுப்பும்சிறு உணர்வும் அறிவிற் கெட்டும்.
ஒருமையுடன் உற்றுற்று உணர்ந்து வந்தால்.
  உள்நாட்டமே உனக்குப் பழக்க மாகும்.
பெருகிவரும் பேரின்ப எல்லை கண்டு,
  பிறப்பிறப்பு எல்லைக்கு அப்பால் உள்ள
நிருவிகற்க நிலைகண்டால், எங்கும் என்றும்
  நீயனைத்தும் ஆகி நிற்கும் தன்மை காண்பாய்!" (ஞாக.பா.1462)

தீட்சை அளிக்கும் முறைகள், முற்காலத்தில் பல வகைகள் இருந்துள்ளன. அவற்றில் ஒன்றுதான் ஸ்பரிஷ தீட்சை என்னும் தொட்டு உணர்த்தும் முறை ஆகும்.

அருட்குருவின் உயிர் ஆற்றலானது கை விரல்கள் மூலமாக சீடருக்குப் பாய்ச்சி குண்டலினி சக்தியை மூலாதாரத்திலிருந்து மேலே எழுப்பி இரு புருவ மையத்தில் நிறுத்துவது முதல் நிலை -
ஆக்கினை தீட்சை ஆகும்.

குருவின் விரல் நெற்றிப் பொட்டில் தொடும்போது சீடருக்கு அந்த இடத்தில் குறுகுறுப்பும், புதுமையான உணர்வும் அறிவிற்குப் புலப்படும்.

குரு தொட்டுக்காட்டிய இடத்திலேயே நினைவை நிறுத்தி உற்று உற்று உணர்ந்து வந்தால், அகநோக்குப் பயிற்சியான உள்நாட்டம் பழக்கமாகி விடும்.

பேரின்பம் பெருகி வருவதையும், பிறப்பு இறப்பு என்ற இரு எல்லைகளுக்கு அப்பாலாக உள்ள வேறுபாடு இல்லாத நிலையைக் காணவும் முடியும்.

அது வேற இது வேற என்ற இரட்டைகளற்ற, ஒன்றே எல்லாமாகவும், எல்ல  வற்றிலும் அந்த ஒன்றையும் உணரலாம்.

அந்நிலையில் தனக்குள்ளாக எல்லாவற்றையும், எல்லாவற்றிலும் தன்னையும் காணுகின்ற பெரும் பேறு கிட்டும்.

## 12 உம்மறிவே விளக்கம் கூறும்.

இயல்பாய் நடப்பவற்றை இறைநிலையால் இயற்கையால் நடைபெறுவதாகக் கூறுகிறோம்.  அந்த இறை நிலைக்கு முன்னதாக எதுவும் இல்லாததால் அதனை ஆதி என்கிறோம்.

அசைவற்று இருப்பதால் நிலை என்கிறோம்.  அதுவே வெட்டவெளி, சுத்தவெளி இருப்பு ஆகும்.

என்றும் மாறுபடாமல் மறையாமல் இருப்பதால் உண்மைப் பொருள் என்ற கருத்தில் மெய்ப்பொருள் என்கிறோம்.

இருப்பாக இருந்த மெய்ப்பொருள் அழுத்தம் என்ற தனது ஆற்றலாலும், இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற தனது அறிவாகிய இயல்பூக்கத்தினாலும் அசைவற்று நிலை அணு.  காந்தம் ஆகும்,

அதனை உயிர் என்றும் உயிர்ச்சக்தி என்றும் சொல்லுகிறோம்.  மெய் அசைந்தால் உயிர் ஆகும்.

ஒளி, ஒலி, சுவை, மணம், உருவத் தோற்றம் ஆகிய அனைத்தும் அணுவின் தன்மாற்ற நிலையான மின்சக்தி ஆகும்.

இவை அனைத்தும் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கக் கூடிய நிகழ்ச்சிகள் ஆகும்.

தன்னுடைய நிலையையும், செயல், சூழல் போன்றவற்றை அறி யும் கட்டுப்பாட்டு உணர்வு ஆகிய சுய உணர்வு அறிவாக மனிதனில் உள்ளது,

அகர உயிர் எழுத்து, அனைத்தும் ஆகி, வேறாய்
  அமர்ந்தது என அகிலாண்டம் அனைத்தும் ஆகிப்.
பகர்வன எல்லாம் ஆகி, அல்லது ஆகிப்.
  பரம் ஆகிச். சொல்லரிய பான்மை ஆகித்.
துகள் அறுசங் கற்பகவிற் பங்கள் எல்லாம்
  தோயாத அறிவு ஆகிச் சுத்தம் ஆகி.
நிகர் இல்பசு பதியான பொருளை நாடி
  நெட்டுயிர்த்துப் பேரன்பால் நினைதல் செய்வாம்.” (தா..பா.25)

- ”அ” என்னும் எழுத்துத் தனித்தும், எனைய எழுத்துகளில் பொருந்தியும் நிற்பது போலத் தனித்தும்,
- அண்டங்கள் அனைத்திலும் கலந்தும் நிற்கின்ற பொருளாகியும்.
- சொல்லப்படும் எல்லாமும் ஆகியும்.
- சொல்லப்படாத அனைத்தும் ஆகியும்.
- மேலான பொருள் ஆகியும்.
- சொற்களால் விளக்கிக் கூறமுடியாத தன்மை உடையது ஆகியும்.
- குற்றமற்றதும், விருப்பு வெறுப்புகள் படியாததும் ஆன அறிவு ஆகியும்.
- தூயதன்மை உடையது ஆகியும்.
- ஒப்பில்லாததும் உயிர்களுக்குத் தலைவனாய் விளங்குவதும் ஆகிய பொருளை,
- ஆராய்ந்து தேடி, பெருமூச்சு விட்டு பேரன்பு கொண்டு நினைவில் நிறுத்துவோமாக!

மெய்ப்பொருள் அறிவாய் உள்ளது என்கிறார் தாயுமானவர். மெய் பொருளை அறிவே விளக்கும் என்கிறது வேதாத்திரியம்.

”அத்துவிதம், துவிதம், சத்து சித்தானந்தம்,
அகம் உணர்ந்தோர் விரித்துரைக்க விசிட்டாத் வைதம்
இத்தனையும் அறிவுஉயிர் பரம் உணர்ந்தால்
இணைந்தஒரே கருத்தாக விளக்க மாகும்.
சித்தநிலை உணர்ந்தோர்கள் உதிர்த்த சொற்கள்,
சிறப்பறியாரால் விளக்கம் செயப்படுங்கால்,
எத்தனையோ குழப்பங்கள் உண்டு பண்ணும்.
இறையுணர்வீர்! உம்மறிவே விளக்கம் கூறும்.” (ஞாக.பா.1125”)

மெய்ப்பொருள் என்பது ஒன்று தான், அதுவே எல்லாமாக ஆகியிருக்கிறது. பரமாத்மா, ஜீவாத்மா எல்லாம் ஒன்றே என்பது அத்துவிதம் ஆகும்.

பரமாத்மா என்னும் இறைநிலை வேறு ஜீவாத்மா வேறு என்பது துவிதம் ஆகும்.

துவிதம் என்றால் இரண்டு, அத்துவிதம் என்றால் இரண்டல்ல ஒன்று என்பதாகும்.

சத்துப் பொருளாக உள்ள இறைநிலை சித்துகளாகிய சிற்றுயிர்களாக ஆகி மனிதன்வரை வந்துள்ளது.

ஆன் + அந்தம் = ஆனந்தம். ஆன்மா உடையவன் மனிதன், ஆன்மா என்ற சிற்றறிவு முடிவுற்ற இடம் பேரறிவு நிலையாகும் என்பதை அகத்தவத்தின் மூலம் உணர்ந்தவர்கள் விளக்கிய உரைகள் விசிட்டாத்வைதம் ஆகும்.

உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த சிற்றறிவே பேரறிவு நிலையில் பரமாகவும் உள்ளது என்பதை உணரும் போது, துவிதம், அத்வைதம், விசிட்டாத்வைதம் ஆகிய அனைத்தும் இணைந்த ஒரே கருத்தாகவே விளக்கமாகும்.

சித்தம் என்ற உயிரை உணர்ந்தவர்கள், உயிரின் படர்க்கையே மனமாகவும் அந்த மனதின் மறுமுனை தெய்வமே அறிவாக இருப்பதையும் உணர்ந்தவர்கள் கூறிய சொற்களையெல்லாம், அந்த உண்மைகளை, சிறப்பை உணராதவர்கள் விளக்கம் செய்ய முற்படும் போது, பல வகையான குழப்பங்களை உண்டு பண்ணும்.

ஆகவே அறிவைக் கொண்ட இறைநிலையை - மெய்ப்பொருளை உணர்ந்தீர்களேயானால், அந்த உமது அறிவே விளக்கங்களைச் சொல்லும்.

# துணைநின்ற நூல்கள்.

1.தாயுமானவர் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம் ,விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம்,ஈரோடு
3. தாயுமானவர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
4. இணையதள தகவல்கள்.
5. உலகசமாதானம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம்,ஈரோடு
6. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
7. தத்துவச் சிகரங்கள், முனைவர் அழகர் ராமானுஜம்.
8. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
9. பட்டினத்தார் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம் ,விஜயா பதிப்பகம், கோவை.